தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அண்மையில் மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.மோகன் அவர்களின் கோயம்புத்தூர் இல்லத்திற்கு நேற்று (20.12.2024) நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, கோவை மாநகர மாவட்டக் கழகச் செயலாளர் நா. கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

திருவண்ணாமலையில்

தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

திருவண்ணாமலை டிச.21-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்...

திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு செயற்குழு கூட்டம் 23.12.2024 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு, நடைபெறவுள்ளது. செயற்குழு கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார். சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்புயாற்றுகிறார்.

செயற்குழு கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு மாவட்டக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னை விமான நிலைய

போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பால் கிடைக்கும் வருவாய் எவ்வளவு!

மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, டிச.21-

சென்னை விமான நிலைய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (ATS) சர்வதேச பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களுக்கு ஏடிஎஸ் சிக்னல் வழங்கியதன்

மூலம் ஒன்றிய அரசுக்கு கிடைத்த வருவாய் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் மக்களவையில் வேலூர் தொகுதி எம்பி D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

சென்னை விமான நிலையத்தில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (ATS), இந்த விமானப் பாதை வழியாகச் செல்லும் பல்வேறு சர்வதேச பயணிகள் மற்றும் சரக்கு விமானங்களுக்கு ஏடிஎஸ் சிக்னல் வழங்குகிறது என்பது உண்மையா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

சென்னை ஏடிஎஸ்ல் உள்ள சிக்னல் சேவையின் மூலம் அரசுக்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளதா? அது குறித்த விவரங்கள் என்ன?

நாட்டிலுள்ள மற்ற முக்கிய விமான நிலையங்களில் ATS ஐ நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு

உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் என்ன? என்று அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மொஹோல் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

சென்னை விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவு, சென்னை விமானத் தகவல் மண்டலத்திற்குள் இயங்கும் அனைத்து விமானங்களுக்கும் விமானப் போக்குவரத்து சேவைகளை (ATS) வழங்குகிறது.

ஏர்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா (AAI), ஒரே ஏர் நேவிகேஷன் சர்வீஸ் வழங்குனராக (ANSP), சென்னையில் வழங்கப்படும் நேவிகேஷனல் சேவைகளுக்கு 2023-24 நிதியாண்டில் ரூ.198.48 கோடிகள் ஈட்டியது.

AAI ஆனது அனைத்து விமான நிலையங்களிலும் விமான போக்குவரத்து சேவைகளை வழங்குகிறது. சிவில் என்கிளேவ்ஸ் தவிர ATS சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளால் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

சைதை சாதிக் தலைமையில் – சென்னை தெற்கு மாவட்ட

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்குகிறார்!

டாக்டர் அ.சுபேர்கான் – எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் முன்னிலை!

சென்னை, டிச.21

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைபிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையில் இன்று கிறிஸ்துமஸ் பெருவிழா நலத்திட்ட உதவிகள் வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றுகிறார். டாக்டர் அ.சுபேர்கான், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை வகிக்கின்றனர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மு.மகேஷ்குமார் எம்.சி., அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை நலஉரிமை பிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளரும், தலைமை கழக சொற்பொழிவாளர் சைதைசாதிக் தலைமையில், சிறுபான்மை நல உரிமைபிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையில் 168வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், எஸ்.கரிமுல்லா, ஹாஜிஅபுபக்கர், எஸ்.ஜெ.அம்பு ரோஸ், இ.ஜெயபிரகாஷ், இ.ரஹ்மதுல்லா, ஏஎஸ்டி.கலீம், ஆ.ஷேக், அ.நசீர், எஸ்.வசுமதி, எச்.ஜான் வேல், ஏ.என்.பர்மன் அலி, டி.ஜான் சன், என்.எம்.முகமதுரியாஸ் ஆகியோர் வரவேற்பில் இன்று (21.12.2024 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில், சைதாப்பேட்டை வி.ஜி.பி.சாலையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கலைக்கல்லூரியில் கிறிஸ்துமஸ் பெருவிழா நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, எஸ்.அருணாச்சலம், காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், அடையாறு சபீல், பகுதி கழக செயலாளர்கள் துரைகபிலன், சு.சேகர், கே.கண்ணன், மு.ராசா, எஸ்.வி.ரவிச்சந்திரன், நொளம்பூர் வே.ராஜன், வி.இ.மதியழகன், கோவிலம்பாக்கம் வெங்கடேசன், அயப்பாக்கம் துரை வீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதைசம்பத், சைதை மா.அன்பரசன், மேடவாக்கம் ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.அரிகிருஷ்ணன், ரா.பாலசுந்தரம், இராமாபுரம் வ.செல்வகுமார்,

வீர.கனிமொழி, மின்னல்கந்தப்பன், த.பஷீர், பி.ஜே.பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கே.விநாயகமூர்த்தி, ஆர்.கிருஷ்ணகுமார், ஜே.இ.பாண்டியன், எஸ்.பிரகாஷ், ச.சங்கர்கணேஷ், செ.ரவி, கா.வி.தியாகராஜன், மாவட்ட அமைப்பாளர்கள் வே.ஆனந்தம், ப.அருண்குமார், கனிமொழிதனசேகரன், கே.குமரேசன், எம்.எஸ்.ஹரிபாபு, ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கர், கழகரமேஷ், சி.பரிமேலழகர், ம.பார்த்திபன், சி.சுரேஷ், எம்.ஆர்.சசிகுமார், வி.ராஜேஷ், நிஷாசையத், தரமணி ஜெகதீசன், முகேஷ்கண்ணா, வி.ஜெயச்சந்திரன்,

பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, வட்ட கழக செயலாளர்கள் அட்கோகமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேரு நகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில் மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டிசெல்வம், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார் ரவி, ஜி.பாபு,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், கு.கார்த்திகேயன், கே.பிரபு, பி.நரேஷ்குமார், எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், மாவுமில்ஸ்ரீதர், கே.தாஸ், என்.தீனதயாளன், வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், பி.ஆர்.துரைராஜ், ஆர்டிஎஸ்.சிற்றரசு, எஸ்.ரவீந்திரகுமார், எம்.ஜி.மதிவாணன், கே.ஸ்டெல்லாமேரி, வி.செல்வி, ஜி.ராஜேஸ்வரி, பி.செண்பம், கே.சுந்தரி, பி.செல்வராணி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஜிம்பிரபு, கொடிபாலா, எல்.கார்த்திக், த.மணி, ஆர்.ஜி.கற்பகம், எஸ்.மல்லிகா, ஆர்.எஸ்.ரமேஷ், கோயில் மணி, ஆர்.தனா, சார்ப்சரவணன், வைரவமூர்த்தி, இரா.பிரபு, சுரேஷ், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், எஸ்.வினோத்குமார், ஆர்.கோகுல், வழக்கறிஞர் மாரியப்பன், ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், சிறுபான்மை நல உரிமைபிரிவின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள் டி.பாஸ்கர், பி.ஜோஸ்வா, கோவிந்தராஜ், ஏ.அருண்குமார், என்.ராஜாமுகமது, பி.ஜான்செல்வராஜ், எம்.அப்துல்ரஹ்மான், எம்.அக்பர்ஹரிப், கே.பீர்முகம்மது, ரசாக்முகம்மது சுல்தான், ஐ.டார்வின், எஸ்.பிரபு தாஸ், டி.தாஸ், எல்.எலின்சல்வம், அப்துல்பாஷா, டி.ஜோசப், ஆர்.எஸ்.டி.கோடீஸ்வரன், எம்.அப்துல்ரஹ்மான், எல்.சார்லஸ், தா.முகம்மதுஅலி, எம்.நூருல்லா, ம.ஷாம், வ.சாமுவேல், ஜே.கெவின், கே.அன்சர்கான், சையது அன்சாரி, ஐ.குமார், ஜே.அந்தோனி.

இந்நிகழ்வின் இறுதியாக மாவட்ட துணைஅமைப்பாளர் அ.தமீம்அன்சாரி, சைதை மேற்கு - கிழக்கு பகுதி அமைப்பாளர்கள் ஜி.ஜே.மோசஸ், எம்.எஸ்.ஷேக்தாவூத் ஆகியோர் நன்றி கூறவுள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் – தகவல் தொழில் நுட்ப அணி சென்னை மண்டல பொறுப்பாளர் சி.எச். சேகர் கலந்து கொண்டு வருகிற 26ஆம் தேதி அன்று நடைபெறவுள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் மண்டலக் கூட்டத்தின் செயல்பாடு அணியின் வளர்ச்சி, சமூக வலைதளத்தின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி.வி. சரவணன் மற்றும் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் மு.வினோத் வி.ஜே. முரசொலி ஜெயக்குமரன், சாகுல் அமீத், ஆதவன் வர்ஷன் மற்றும் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள், சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர்கள் மகளிர் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் சி.பி.சி.எல். நிறுவனத்தால் ஏற்பட்ட

எண்ணூர் எண்ணெய் கசிவால் ஏற்பட்ட பாதிப்புகளை தீர்க்க எடுத்த நடவடிக்கை என்ன?

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.21-

கடந்த ஆண்டு ஒன்றிய அரசின் CPCL நிறுவனத்தால் ஏற்பட்ட எண்ணூர் எண்ணெய் கசிவால் ஏற்பட்ட பாதிப்புகளை முழுமையாக தீர்த்து வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

சென்னையில் இயங்கிவரும் ஒன்றிய அரசின் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் (CPCL) நிறுவனத்திலிருந்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் எண்ணூர் பகுதியில் கச்சா எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு அப்பகுதியின் சுற்றுச்சூழலுக்கு மட்டுமின்றி, பறவைகள், மீன் இனங்களின் இனப்பெருக்கம் என பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது.

மேலும் அந்தப் பகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் உள்ள மீன்பிடிப் படகுகள், மீன்பிடி வலைகள் என அனைத்திலும் கச்சா எண்ணெய் படிந்து அவர்களது வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சமீபத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் CPCL நிறுவனத்துக்கு ரூ.73 கோடி ரூபாய் அபராதம் விதித்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இதுகுறித்த பல்வேறு கேள்விகளை ஒன்றிய எரிசக்தித்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

எண்ணூர் எண்ணெய்க் கசிவால், ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை ஆய்வு செய்து, இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமும் (CPCL) ஒன்றிய அரசும் மேற்கொண்ட நடவடிக்கை என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

எண்ணெய்க் கசிவால் பாதிக்கப்பட்ட இடங்களை, குறிப்பாக சதுப்பு நில காடுகள் மற்றும் ஏரிப்பகுதிகளை அப்பாதிப்பிலிருந்து மீட்டு மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) உத்தரவுப்படி, சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிட்டெட் (CPCL) நிறுவனம் பின்பற்றுகின்ற வழிகாட்டு நெறிமுறைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கவும், ஒரு வேளை நிகழ்ந்தால், அதனை திறம்பட கையாளவும், CPCL நிறுவனத்திடம் பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

எண்ணெய் கசிந்த இடங்களில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பைச் சரிசெய்ய CPCL மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை அவ்வப்போது மாநில அரசுக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படைத் தன்மையோடு அந்நிறுவனம் வழங்குகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) வழங்கிய அனைத்து உத்தரவுகளையும் CPCL முறையாக பின்பற்றுகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும், இல்லையெனில் அதை பின்பற்றுவதில் என்ன சிக்கல் என்று தெளிவாகக் குறிப்பிடவும் எனக் கேள்வி எழுப்பினார்.

இந்த எண்ணெய் கசிவினால் ஏற்பட்ட சமூக பொருளாதார சேதங்கள் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவைகளை சரிசெய்ய CPCL ஏதேனும் திட்டங்கள் வைத்துள்ளதா? அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

சட்டமேதை அண்ணல் அம்பேத்கரை அவமதித்த

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்!

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டன அறிக்கை!

சென்னை, டிச.21

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

நாடாளுமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கர் அம்பேத்கர் என உச்சரிப்பது இப்போது பேஷனாகிவிட்டது என கிண்டலாக பேசி அம்பேத்கர் அம்பேத்கர் என தெரிவிப்பதற்கு பதில் கடவுள் பெயரை சொல்லி இருந்தால் ஏழு ஜென்மத்திற்கும் புண்ணியமாவது கிடைத்திருக்கும் என பேசியிருப்பது பெரும் கண்டனத்திற்கு உரியது அம்பேத்கர் என்ற மாமனிதர் பிறக்கவில்லை என்றால் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அமித்ஷா அவருடை மொழியில் சொல்ல வேண்டுமானால்

புண்ணியம் கிடைத்திருக்காது, இன்று பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மேலோங்கி நிற்பதை பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அமைச்சர் அமித்ஷா போன்றோரால் சகித்துக் கொள்ள முடியவில்லை அரசியல் அமைப்பிலும் ஆட்சி அதிகாரத்திலும் அனைத்திலும் நம்மை காட்டிலும் மேலோங்கி வருகிறார்களே இதற்கெல்லாம் யார் காரணம் அம்பேத்கார் அவர்கள் தானே இந்த அரசியல் அமைப்பு சட்டம் தானே பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் வகுத்த இட ஒதுக்கீடு தானே என்ற ஆதங்கம் அவரால் சகித்து கொள்ள முடியவில்லை அவர் அவருடைய ஆதிக்க குணத்தை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அம்பேத்கர் அரசியல் அமைப்பு சட்டத்தையும் இட ஒதுக்கீட்டையும் கொண்டுவரவில்லை என்றால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையை எண்ணிபார்க்கவே முடியாது இருக்கு, எல்லா நிலையிலும் உயர்ந்து நிற்கின்ற இந்நாளிலேயே ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களின் மேலாதிக்க ஆணவத்தோடு பேசுகிறார் என்றால் அந்த காலத்தில் அண்ணல் அம்பேத்கர் தந்தை பெரியார் எந்த அளவிற்கு மேலாதிக்க சக்திக்களோடு போராடி இருப்பார்கள் என்பதை நினைத்தால் நெஞ்சு பதைபதைக்கிறது

அனைத்துத் துறைகளிலும் மேலோங்கி நிற்கிறோம் என்பதை சகித்துக்கொள்ள முடியாத அமைச்சர் அமித்ஷா ஆணவத்தோடு பேசி இருக்கிறார் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசியதால் அண்ணலின்புகழ் எந்த காலத்திலும் அழிந்து விடாது, அமித்ஷா அவர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்கிறோம் அண்ணல் அம்பேத்கர் தான் எங்கள் எண்ணத்திலும் உள்ளத்திலும் உச்சரிப்பிலும் எப்போதும் அம்பேத்கர் அம்பேத்கர் என்று ஒலித்துக் கொண்டே தான் இருக்கும்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞரின் மறு உருவம் என்பதை பறைசாற்றும் விதமாக அண்ணல் அம்பேத்கரை ஒன்றிய அமைச்சர் இழிவாக பேசியதை கண்டித்து இந்தியாவின் முதல் குரலாக தன் கண்டனத்தை பதிவு செய்தது இல்லாமல் தமிழ்நாட்டில் தன் இயக்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்து ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர் என்பதற்கு இதைவிட சான்று வேறு என்ன சொல்ல முடியும் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் சமத்துவத்தை நிலைநாட்டி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் , பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வரும் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கரை இழிவாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன் மேலும் இழிவாக பேசியதை திரும்ப பெற்று பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, பெரம்பூர் வடக்குப் பகுதி, 35 வது வட்டம், முத்தமிழ் நகர், 7 வது பிளாக்கை சேர்ந்த பி.எல்.ஏ. 2 நிர்வாகி ஃபரிதாவிற்கு, மருத்துவச் செலவிற்காக ரூபாய் 5 ஆயிரத்தை, மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான் ஏற்பாட்டில், 35 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.உமாபதி முன்னிலையில் வழங்கினர். உடன் வட்டப் பொருளாளர் இ.சல்மான்பாய், பகுதிப் பிரதிநிதி பி.செல்வமணி, மருத்துவ அணி துணை அமைப்பாளர் அ.ஷேக் அப்துல்லா ஆகியோர் உள்ளனர்.